TNVR090006442025

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
முன்னிலை திரு. P. பாலமுருகன்,B.Com., B.L.,
சார்பு நீதிபதி, விருதுநகர்.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் புதன் கிழமை
O.S.No.162/2025
–––––

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, சத்திரரெட்டியப்பட்டி கிராமம், கதவு எண்.4/6ல் வசிக்கும் தர்மராஜன் மகன் இந்து, சுமார் 56 வயதுள்ள தாமோதரன். ... வாதி

/எதிர்/

1. விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, ரோசல்பட்டி பஞ்சாயத்து, பாண்டியன் நகர், ஜக்கிதேவி நகர், கதவு எண்.1952/1ல் வசிக்கும் கருப்பசாமி மகன் இந்து, சுமார் 50 வயதுள்ள கண்ணன்.

2. விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, ரோசல்பட்டி பஞ்சாயத்து, பாண்டியன் நகர், ஜக்கிதேவி நகர், கதவு எண்.1952/1ல் வசிக்கும் கண்ணன் மனைவி இந்து, சுமார் 48 வயதுள்ள செல்வி.

3. விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, ரோசல்பட்டி பஞ்சாயத்து, பாண்டியன் நகர், ஜக்கிதேவி நகர், கதவு எண்.1952/1ல் வசிக்கும் கண்ணன் மகள் இந்து, சுமார் 26 வயதுள்ள ரம்யா. ... பிரதிவாதிகள்

பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்த வேண்டிய தாவா புரோநோட்டு தொகை ரூ.6,46,315/– ஐ செலுத்த உத்தரவிட வேண்டியும், அதில் அசல் தொகை ரூ.5,00,000/–க்கு வழக்கு தாக்கல் செய்த காலம் முதல் கடன் செலுத்தி தீரும் வரை ஆண்டுக்கு 6% வீதம் வட்டி தொகை செலுத்த உத்தரவிட வேண்டியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு மதிப்பு | : | ரூ.6,46,315/- |
| நீதிமன்ற கட்டணம் | : | ரூ.19,390/- தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டப்பிரிவு 22 ன்படி செலுத்தப்பட்டுள்ளது. |
| வழக்குமூலம் | : | 11.06.2023, 15.09.2025, 25.09.2025 ஆகிய தேதிகளில் விருதுநகர் தாலுகா, சத்திரரெட்டியப்பட்டி கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| வழக்கு தாக்கல் நாள் | : | 20.11.2025 |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தின் முன்பு 27.03.2026 அன்று இறுதியான விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குருசாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டு உத்தரவிட்டும், வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து அளிக்கும்

## <u>தீர்ப்பாணை</u>

1. வாதியின் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

2. வாதிக்கு, பிரதிவாதிகள் தாவா தொகை ரூ.6,46,315/-யையும், இதில் அசல் கடன் தொகை ரூ.5,00,000/-த்திற்கு வழக்கு தாக்கல் செய்த (20.11.2025) நாளிலிருந்து வசூலாகும் நாள் வரை ஆண்டிற்கு 6% வட்டியும் செலுத்த வேண்டும்

3. இவ்வழக்கின் செலவுத்தொகையாக பிரதிவாதிகள், வாதிக்கு ரூ.25,409.00/- கொடுக்க வேண்டும்.
   (வாதி தரப்பில் செலவுத்தொகை பட்டியல் ரூ.25,409.00/-)

**செலவுத்தொகை விபரம்**

(வாதி தரப்பில் செலவுத் தொகை பட்டியல் தாக்கல்)

| | வாதி ரூ.பை |
|---|---|
| 1. பிளையிண்டுக்கு முத்திரை கடுதாசி | 19,390.00 |
| 2. வக்காலத்து | 10.00 |
| 3. வழக்கறிஞர் கட்டணம் (சீனியர்) | 4,507.00 |
| 4. கட்டளைகளை சேர்ப்பிப்பதற்கு | -- |
| 5. வழக்கறிஞர் கட்டணம் (ஜீனியர்) | 1,502.00 |
| 6. பிளிடிங் சார்ஜ் | -- |
| 7. பிராசஸ் தயாரித்த பீஸ் | -- |
| 8. போஸ்டல் ரிஜிஸ்தர் நோட்டீஸ் சார்ஜ் | -- |
| **மொத்தம்** | **25,409.00** |

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ம் நாள் என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

சார்பு நீதிபதி,
விருதுநகர்.

சார்பு நீதிமன்றம், விருதுநகர்.
O.S.No.162/2025
தீர்ப்பாணை
நாள். 01.04.2026